**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அம்பத்தூர்**

**முன்னிலை திரு.P. ஜெய்சங்கர், B.A., M.L.,**

**நீதித்துறை நடுவர்**

**அம்பத்தூர்**

**2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 15 ஆம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 100/2015**

**TNTR29-000131-2015**

| | | |
|---|---|---|
| காவல் நிலையத்தின் பெயர் மற்றும்<br><br>குற்ற எண். | :<br><br>: | அரசு தரப்பில்<br>காவல் உதவி ஆய்வாளர்<br>டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல் நிலையம்,<br>குற்ற எண். 329/2013 |
| எதிரிகளின் பெயர், வயது மற்றும் முகவரி | : | 1. ஹேம்லால், (தலைமறைவு) (**A-1 இவருக்கு சி.சி. 100/2015 என்ற எண்ணிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு சி.சி.92/2026 என்ற எண் வழங்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது**)<br>பிளாட் எண்.38, பாரதி நகர் முதல்தெரு,<br>மிட்டணமல்லி, சென்னை - 55<br>2. செல்வம், த/பெ. ராஜி,<br>எண்.35, மேல் ரகுநாதபுரம், மாங்காடு,<br>சென்னை - 122 |
| எதிரிகளின் ஜாதி அல்லது இனம் | : | இந்து |
| எதிரிகளின் தொழில் | : | கூலி |
| குற்ற நிகழ்வு நாள் | : | 16.07.2013 |
| புகார் தேதி | : | 16.07.2013 |

| | | |
|---|---|---|
| 1 வது எதிரி கைது செய்யப்பட்ட நாள்<br>2வது எதிரி கைது செய்யப்பட்ட நாள் | :<br>: | absconding<br>25.12.2013 |
| 1 வது எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்<br>2வது எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | :<br>: | Absconding<br>24.06.2014 |
| விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நாள் | : | 06.01.2026 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 15.06.2026 |
| தண்டனை மற்றும் உத்தரவு | : | இவ்வழக்கின் 1வது எதிரி தலைமறைவானதால் அவர் மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு சி.சி.எண்.92/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில், மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் 2வது எதிரி மீது சட்டப்பிரிவு 394 IPC இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை 2வது எதிரிக்கு அளித்து 2வது எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, கு.வி.மு.ச 248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.<br>இவ்வழக்கில் பி.ஐ.எண்.66/2015 தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தின் உத்தரவு சி.சி.எண்.92/2026 இன் தீர்ப்புரையில் |

| | | |
|---|---|---|
| | | பகரப்படும். |
| காலதாமதத்திற்கான காரணம் | : | அரசுதரப்பில் சாட்சிகளை விசாரணை செய்வதில் காலதாமதம் |

இந்த வழக்கு 28.04.2015 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த குற்றவியல் உதவி அரசு வழக்கறிஞர் நிலை 1 திரு.கொளஞ்சிநாதன் அவர்கள் ஆஜராகியும், 2வது எதிரி தரப்பில் திரு.V.பிரசாந்த் என்பவர் முன்னிலையாகியும் இருதரப்பிலும் வாதுரைகள் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**<u>தீர்ப்புரை</u>**

டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல் நிலையம், குற்ற எண். 329/2013 காவல் உதவி ஆய்வாளரால் புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 394 IPC இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்ற செயல் புரிந்துள்ளதாக சட்டப்பிரிவு 173(2) கு.வி.மு.ச - வின் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

## 1) <u>குற்ற இறுதி அறிக்கை</u> :-

கடந்த 16.07.2013 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மிட்டனமல்லி, பாரதி நகர், 1வது தெரு, எண்.14 என்ற விலாசத்தில் உள்ள சாட்சி-1 மனோ ரஞ்சிதம் என்பவர் வீட்டில் 1வது எதிரி தனது குடும்பத்துடன் 2 நாட்களாக கொத்தனார் வேலை செய்து வந்ததாகவும், 1வது எதிரி சாட்சி-1 இன் வீட்டில் யாரும் இல்லாமல் சாட்சி-1 மட்டும் தனியாக இருப்பதை அறிந்து குற்றம் செய்யும் நோக்கத்துடன் 2வது எதிரியுடன் சேர்ந்து சாட்சி-1 இன் வீட்டில் சென்று சாப்பாடு கேட்க, சாட்சி-1 சமையலறைக்கு செல்லும்போது 2வது எதிரியை மட்டும் வெளியில் நிறுத்தி விட்டு 1வது எதிரி வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சாட்சி-1 ஐ பின் தொடர்ந்து சென்று அவரின் காதில் இருந்த அரை சவரன் கம்மலை கையால் பிடித்து இழுத்ததில் தடுத்து

திமிறியதால் வலது காது அறுபட்டபோது சாட்சி-1 இன் கழுத்தில் இருந்த 4 சவரன் தாலி செயினை பிடித்து இழுத்து சாட்சி-1க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதால் சாட்சி-1 மயக்கமடைந்ததாகவும், அச்சமயத்தினை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு தங்களின் சுயலாபத்திற்காக 1வது எதிரி, 2வது எதிரியுடன் சேர்ந்து சாட்சி-1 இன் காதில் இருந்த சுமார் அரை சவரன் கம்மல் மற்றும் 4 சவரன் தாலிச் செயினை அறுத்து கொள்ளையடித்து சென்று குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே எதிரிகள் மீது சட்டப்பிரிவு 394 இதச பிரிவின் படி டி-8 முத்தாபுதுப்பேட்டை காவல் ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் 27.11.2014 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கின் 1வது எதிரி தலைமறைவானதால் அவர் மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு சி.சி.எண்.92/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில், மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் 2வது எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தில் 28.04.2015 ஆம் தேதி அன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2வது எதிரிகள் பிணையில் இருந்ததால் அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 2வது எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் 2வது எதிரிக்கு பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கின் 2வது எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து 06.01.2026 ஆம் தேதியன்று 2வது எதிரியின் மீது சட்டப்பிரிவு 394 IPC இன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக குற்றச்சாட்டு வனைந்தும், அது குறித்து விளக்கி கூறப்பட்டது. குற்றச்சாட்டின் சாராம்சம் குறித்து விளக்கி கேட்ட போது 2வது எதிரி குற்றச்சாட்டை மறுத்து சாட்சி விசாரணை வேண்டினார். எனவே இவ்வழக்கில் சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டது.

4. அதன் அடிப்படையில் அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 1 முதல் 19 வரையிலான சாட்சிகள் காட்டப்பட்டு அதில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு

அ.த.சா.ஆ. 1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத்தரப்பு சான்று பொருள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2வது எதிரி தரப்பில் எவ்வித சாட்சியமும் விசாரணை செய்யப்படவில்லை. அதே போல் எவ்வித சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின் வருமாறு :-**

கடந்த 16.07.2013 ஆம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் நிலைய அலுவலில் இருந்த போது சாட்சி மனோரஞ்சிதம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.த.சா.ஆ.1** ஆன புகாரினைப் பெற்று நிலைய குற்ற எண்.329/2013 சட்டப்பிரிவுகள் 394 இதசவின் கீழ் **அ.த.சா.ஆ.3** ஆன முதல் பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளார். இவ்வழக்கில் சாட்சிகள் ஷோபா, சுப்பையா பேச்சியம்மாள், ராஜேஷ், பவாணி, விவேகானந்தன், வெங்கடேஷ், செங்கல்வராயன் ராயுடு, சுனிதா ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ராஜேஷ் மற்றும் தீபன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ.4** ஆன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. மேலும் எதிரிகளை தேடி வந்த நிலையில் 25.12.2013 ஆம் தேதி டி11 திருநின்றவூர் காவல் நிலையத்தில் குற்ற எண்.1587/2013 என்ற வழக்கில் 2 வது எதிரி செல்வம் என்பவரை கைது செய்த போது 2 வது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சம்பத், சிவா ஆகியோர் முன்னிலையில் பெற்று, அதன் அடிப்படையில் 2 வது எதிரி எடுத்து ஆஜர் செய்த வழக்கு சொத்தை **அ.த.சா.ஆ.6** ஆன கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்படி வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து, 2 வது எதிரியை இவ்வழக்கில் சம்பிரதாய கைது மூலம் கைது செய்யப்பட்டு 26.12.2013 ஆம் தேதி நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கில் முதலாம் எதிரி தலைமறைவாக இருப்பதால் அவ்வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் சி.சி.எண்.92/2026 ஆக வழங்கப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும் இவ்வழக்கில் சாட்சி 1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தமிழ்மணி ESVEE மருத்துவமனை அவர்களை விசாரணை செய்து **அ.த.சா.ஆ.7** ஆன

காயச்சான்று பெற்று, அதன் பின்பு அனைத்து சாட்சிகளின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை 27.11.2014 அன்று தாக்கல் செய்துள்ளார்.

7. புகார் **அ.த.சா.ஆ.1**, புகைப்படத்தில் காட்டப்படும் வழக்கு சொத்து **அ.த.சா.ஆ.2,** முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3,** பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4**, ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.5,** கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.6,** விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று **அ.த.சா.ஆ.7.** 3 சவரன் எடையுள்ள தங்க செயின் **அ.த.சா.பொ.1** ஆகும். இதுவே அரசுதரப்பு சாட்சியத்தின் சுருக்கம் ஆகும்.

8) இவ்வழக்கில் கடந்த 15.06.2026 ஆம் தேதியில் அரசுதரப்பு சாட்சியங்களில் 2வது எதிரிக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து அவற்றை கேள்விகளாக தொகுத்து சட்டப்பிரிவு 313(1)(பி) கு.வி.மு.ச.வின் கீழ் வினவிய போது, 2வது எதிரி அவற்றினை பொய் சாட்சி, பொய் வழக்கு என்று மறுத்துக் கூறினார். தங்களது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சிகள் இல்லை என கூறினார். எனவே 2வது எதிரி தரப்பில் வாய்மொழி சாட்சிகள் யாரும் இல்லையென அன்றைய தினமே 2வது எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9). **<u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை :-</u>**

இவ்வழக்கின் 1வது எதிரி தலைமறைவானதால் அவர் மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு சி.சி.எண்.92/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில், 2வது எதிரி மீது சட்டப்பிரிவு 394 IPC இன்கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில்எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.

10) **<u>தீர்வு</u>**

(i) இருதரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டதால், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசுதரப்பு குற்றவியல் உதவி வழக்கறிஞர் அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்தும் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களில் இருந்தும், சான்று பொருள்களிலிருந்தும் 2வது எதிரி மீது சட்டப்பிரிவு 394 IPC இன் கீழ்

சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே 2 வது எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

(ii) 2வது எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.1, 1வது எதிரி மீதான குற்றச்சாட்டு குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை எனவும், நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 ஆகியோரை தவிர ஏனைய பட்டியல் சாட்சிகள் இவ்வழக்கில் விசாரணை செய்யப்படவில்லை எனவும், அ.சா.1 அரசுதரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாகவும், இவ்வழக்கின் சான்றாவணங்களான பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை வழக்கிற்காக நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை எனவும், 2வது எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை எனவும், அதனடிப்படையில் 2வதுஎதிரியிடமிருந்து எவ்வித வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை எனவும், அரசுதரப்பு 2வது எதிரியின் மீதான குற்றச்சாட்டு குறித்து எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் 2வதுஎதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு குறிப்பிட்டுள்ளார்.

(iii) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 திருமதி.மனோ ரஞ்சிதம் என்பவர் தமது சாட்சியத்தில் கடந்த 16.07.2013 அன்று தனது வீட்டில் தான் வேலை செய்து கொண்டிருந்த போது ஒரு நபர் தனது கழுத்தில் அணிந்திருந்த தாலி சரடை பறித்து சென்று விட்டதாகவும், அதனால் தான் மயங்கி கீழே விழுந்து விட்டதாகவும், மயக்கம் தெளிந்து எழுந்த போது பக்கத்து வீட்டை சேர்ந்த ஷோபா என்பவரிடம் நடந்த விபரங்களை அ.சா.1 கூறியதாகவும், அதன்பின்பு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்த பின்பு 6 மாதம் கழித்து தன்னுடைய நகை கிடைத்து விட்டதாக போலீசார் கூறியதன் பேரில் தான் நீதிமன்றத்தில் மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றதாகவும், தனது நகை கிடைத்துவிட்டதால் இவ்வழக்கை பொறுத்து மேல்நடவடிக்கையை கைவிடுமாறும் சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) மேற்கண்ட அ.சா.1 இன் தமது சாட்சியத்தில் தனது தாலி சரடை மட்டும் அறுத்து

சென்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அரசுதரப்பு வழக்கில் அதற்கு முரண்பட்டு அ.சா.1 இன் கம்மலுடன் சேர்த்து தாலி சரடையும் அறுத்து சென்று விட்டதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அரசத்தரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல வழக்கு சம்பவம் நடைபெற்றதா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

(v) மேலும் அ.சா.1 எதிரிகளை அடையாம் காட்டியோ, எதிரிகள் மீதான குற்றச்சாட்டு குறித்தோ, எவ்வித சாட்சியமும் அளிக்காமல் வழக்கின் நடவடிக்கைகளை கைவிடுமாறு பிறழ் சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து எதிரிகள் அரசுதரப்பு வழக்கில் குறிப்பிட்டுள்ளது போல வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்களா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

(vi) இவ்வழக்கில் பட்டியல் சாட்சிகள் 2 முதல் 18 வரையிலானவர்கள் தற்பொழுது எங்கு வசித்து வருகிறார்கள் என்பது கண்டறியாத நிலையில் அவர்களுக்கு பதிவு தபாலில் அனுப்பிய சாட்சி அழைப்பாணையும் திரும்பி விட்ட நிலையில் புலன் விசாரணை அதிகாரியால் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு மேற்கண்ட 2 முதல் 18 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்வதிலிருந்து அரசுதரப்பு விலக்கி கொண்டது.

(vi) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு.ராஜேந்திரன் என்பவருக்கு பதிலாக அச.ா.2 ஆக விசாரணை செய்யப்பட்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜசேகர் என்பவர் தமது சாட்சியத்தில் மேற்கண்ட புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான திருமதி.மனோரஞ்சிதம் என்பவரிடமிருந்து **அ.த.சா.ஆ.1** ஆன புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.329/2013, சட்டப்பிரிவு 394 IPC இன் படி வழக்கு பதிவு செய்து, சம்பவயிடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, 2வது எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, 2வது எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்து, பின்பு ஏனைய சாட்சிகளை விசாரணை முடித்து, வழக்கின் புலன் விசாரணை முடித்து, இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்திருந்தாலும் நிகழ்நிலை புகார்தாரரான

அ.சா.1 இவ்வழக்கை பொறுத்து மேல் நடவடிக்கையை கைவிடுமாறு குறிப்பிட்டுள்ளதாலும், ஏனைய பட்டியல் சாட்சிகளான 2 முதல் 18 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்படாத நிலையிலும், மேற்கண்ட புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியம் அலுவல் முறையில் அளிக்கப்பட்ட சம்பிரதாய சாட்சியமாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது.

(vii) எனவே அரசுத் தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிய சான்றாவணங்களிலிருந்து, 2வது எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள சட்டப்பிரிவு 394 IPC இன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின் பலனை 2வது எதிரிக்கு அளிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, மேற்கண்ட குற்றச்சாட்டின் கீழ் 2வது எதிரி குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11) **<u>முடிவாக,</u>**

இவ்வழக்கின் 1வது எதிரி தலைமறைவானதால் அவர் மீதான வழக்கு தனியாக பிரிக்கப்பட்டு சி.சி.எண்.92/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வரும் நிலையில், மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் 2வது எதிரி மீது சட்டப்பிரிவு 394 IPC இன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை 2வது எதிரிக்கு அளித்து 2வது எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, கு.வி.மு.ச 248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

12. இவ்வழக்கில் பி.ஐ.எண்.66/2015 தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தின் உத்தரவு சி.சி.எண்.92/2026 இன் தீர்ப்புரையில் பகரப்படும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக மொழிதல் செய்தும், அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 - ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 15 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையில் அவையறியப் பகரப்பட்டது.

JAISANKAR Digitally signed by JAISANKAR

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | : | திருமதி.மனோரஞ்சிதம் | நிகழ் நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | : | திரு.ராஜேகர், காவல் உதவி ஆய்வாளர், | புலன் விசாரணை அதிகாரி |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :-**

| | | | |
|---|---|---|---|
| **அ.த.சா.ஆ.1** | : | புகார் | அ.சா.1 |
| **அ.த.சா.ஆ.2** | : | புகைப்படத்தில் காட்டப்படும் வழக்கு சொத்து | |
| **அ.த.சா.ஆ.3** | : | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| **அ.த.சா.ஆ.4** | : | பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் | அ.சா.2 |
| **அ.த.சா.ஆ.5** | : | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி | அ.சா.2 |
| **அ.த.சா.ஆ.6** | : | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.2 |
| **அ.த.சா.ஆ.7** | : | விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று | அ.சா.2 |

எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-

| | | | |
|---|---|---|---|
| **அ.த.சா.பொ.1** | : | 3 சவரன் எடையுள்ள தங்க செயின் | அ.சா.2 |

**Case Summary : –**

1) 3 வது எதிரி சிறையில் இருந்த நாட்கள் -- 182 days

2) குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் -- 28.04.2015

3) 2வது எதிரி முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் -- 06.01.2026

| | | | | |
|---|---|---|---|---|
| 4) 2 வது எதிரி மீதான குற்றச்சாட்டை விளக்கிக் கேட்ட நாள் | | | -- | 06.01.2026 |
| 5) இடைக்கால மனு விபரம் | | | -- | ------- |
| 6) சாட்சிகளின் விசாரணை நாள் | | | | |
| அ.சா.1 | -- | முதல் விசாரணை | -- | 16.02.2026 |
| | | குறுக்கு விசாரணை | -- | 16.02.2026 |
| அ.சா.2 | -- | முதல் விசாரணை | -- | 16.02.2026 |
| | | குறுக்கு விசாரணை | -- | 16.02.2026 |
| 7) 3வது எதிரி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி) கு.வி.மு.ச.வின் கீழ் விசாரிக்கப்பட்ட நாள் | | | -- | 15.06.2026 |
| 8) 3வது எதிரி தலைமறைவாக இருந்த விபரம் | | | -- | ----- |
| 9) மாண்புமிகு மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் | | | -- | இல்லை |

JAISANKAR Digitally signed by JAISANKAR

குறிப்பு :-

1) விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இல்லை.

2) காவல் துறையினருக்கு வழக்கின் முடிவு தெரிவிக்கப்பட்டது.